[1992 மார்ச் 10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அந்த என்க்ரோச்மென்ட் என்று சொல்லப்படுகின்ற ஆக்கிரமிப்புகள் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றன. அது என்னுடைய கவனத்திற்கு வருகின்ற நேரத்திலே அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட வேண்டும். அது பாசனப் பகுதியாக இருந்தாலும் சரி, அணைக் கட்டினுடைய நீர்த் தேக்கப் பகுதியாக இருந்தாலும் சரி, இவ்வகளை எல்லாம் உடனடியாக நீக்க வேண்டும் என்ற அந்த உணர்வினை இந்த அரசு பெற்றிருக்கிறது. நாம் அப்படி சில நேரத்திலே, நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் கொஞ்சம் குறுக்கீடுகளும் செய்கிறார்கள், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி விடாதீர்கள் என்று, ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும், ஆகவே ஆக்கிரமிப்பை பொறுத்த வரையிலே இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 149 திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

149—

பெரியேரி அருகில் வெள்ளாற்றின் குறுக்கே அணை.

* 753. திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் தொகுதியிலுள்ள 30 கிராம நீர்ப்பாசன ஏரிகளுக்கு பயனளிக்கும் வகையில் சேலம் மாவட்டம் பெரியேரி அருகில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

அரசிடம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாலைவனத்தில் சோலைவனமாக காட்சியளிக்கும் இந்த நிதி நிலையிலேயே ‘இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு’ என்ற வள்ளுவனின் வாய்ப்பாட்டின்படி மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும் ஒரு நல்ல நாட்டிற்கு உறுப்புகள் என்ற அடிப்படையில் வறண்டு கிடக்கும் எனது சின்னசேலம்

தொகுதியில் 30 கிராம நீர்ப்பாசன ஏரிகளுக்கு பயனளிக்கும் வகையில் அமைய இருக்கும் வெள்ளாற்றின் குறுக்கே கட்ட இருக்கும் இந்த அணைக்கட்டு பலன் அளிக்கும் என்ற எண்ணத்தோடு நீண்ட கால கோரிக்கையான சின்னசேலம் தொகுதி விவசாய மக்களின் கனவாக இருக்கும் இந்தத் திட்டத்தை செயற் படுத்த இதய தெய்வம் ஆட்சியில் வழி வகை காண இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம். ஆத்தூர் தாலுக்கா பெரியேரி கிராமத்தின் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள பாழடைந்த பாக்கம்பாடி அணைக் கட்டைத் திரும்ப கட்டுவதற்கான ஒரு திட்டம் இன்றைக்கு அரசுக்கு வரவில்லை என்றாலும் கூட நம்முடைய தலைமைப் பொறியாளர் (பிளானிங் அண்டு டிசைன்) என்று சொல்லப்படுகின்ற திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு அவர்களால் இன்றைக்கு ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, இந்தத் திட்டத்தின் கீழ் அணைக்கட்டி கீழ்ப் புறம் உள்ள 25 தொடர் கண்மாய்களுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும், இதனுடைய பாசனப் பரப்பு ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருகிறது, இன்றைக்கு இதற்கு ஆகின்ற செலவும் ஏறத்தாழ 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுடைய பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்று சொல்லப்படுகின்ற விகிதாச்சாரமும் இன்றைக்கு கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனையில் வைத்திருக்கிறது. இது சம்பந்தமான முடிவுகளை அரசுப் பரிசீலனைக்குப் பிறகு நிதி ஆதாரத்தினைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 150. திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

150—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை.

*1961 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடற்கரைகளில் அடிக்கடி கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை மீனவர் கிராமங்களுக்கு சேதங்கள் ஏற்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?